# யூலை- 31 - திங்கள்
## புனித இக்னேசியஸ் லொயலா

**தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர்: எகிப்தில் பெரியன புரிந்தவரை மறந்தனர்: திபா. 106:21**

## முதல் வாசகம்:விடுதலைப் பயணம் 32 : 15 - 24

மோசே திரும்பி மலையிலிருந்து இறங்கி வந்தார். முன்பின் இருபுறமும் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பலகைகள் இரண்டும் அவர் கையில் இருந்தன.அப்பலகைகள் கடவுளால் செய்யப்பட்டவை. பலகைகள் மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்தும் கடவுள் எழுதியதே.அந்நேரத்தில் மக்கள் எழுப்பிய கூச்சலைக் கேட்ட யோசுவா மோசேயை நோக்கி, ”இது பாளையத்திலிருந்து எழும் போர்முழக்கம்” என்றார்.அதற்கு மோசே, ”இது வெற்றி முழக்கமோ தோல்விக் குரலோ அன்று. பாட்டொலிதான் எனக்குக் கேட்கிறது” என்றார்.பாளையத்தை அவர் நெருங்கிவந்தபோது கன்றுக் குட்டியையும் நடனங்களையும் கண்டார். மோசேக்குச் சினம் மூண்டது. அவர் தம் கையிலிருந்த பலகைகளை மலையடிவாரத்தில் வீசியெறிந்து உடைத்துப் போட்டார்.அவர்கள் செய்து வைத்திருந்த கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாகு மட்டும் அதை இடித்துத் தண்ணீரில் தூவி, இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச் செய்தார்.பின்னர் மோசே ஆரோனை நோக்கி, ”இம்மக்கள் உமக்கு என்ன செய்தார்கள்? இவர்கள்மேல் பெரும் பாவம் வந்துசேரச் செய்து விட்டீரே!” என்று கேட்டார்.அதற்கு ஆரோன், ”என் தலைவராகிய நீர் சினம் கொள்ள வேண்டாம். இம்மக்கள் பொல்லாதவர்கள் என்பது உமக்குத் தெரியுமே!அவர்கள் என்னை நோக்கி, ”எங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களைச் செய்துகொடும். எங்களை எகிப்து நாட்டினின்று நடத்தி வந்த அந்த ஆள் மோசேக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை” என்றனர்.நானும் அவர்களிடம் ”பொன் அணிந்திருப்பவர்கள் கழற்றித் தாருங்கள்” என்றேன். அவர்களும் என்னிடம் தந்தனர். நான் அதனை நெருப்பில்போட, இந்தக் கன்றுக்குட்டி வெளிப்பட்டது” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர்.

## நற்செய்தி: மத்தேயு 13 : 31 - 35

அக்காலத்தில் இயேசு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை : ”ஒருவர் கடுகு விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும்விடச் சிறியது.ஆனாலும், அது வளரும்போது மற்றெல்லாச் செடிகளையும் விடப் பெரியதாகும். வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும். விண்ணரசு இக்கடுகு விதைக்கு ஒப்பாகும்.அவர் அவர்களுக்குக் கூறிய வேறு ஓர் உவமை ”பெண் ஒருவர் புளிப்புமாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்புமாவுக்கு ஒப்பாகும்.”இவற்றையெல்லாம் இயேசு மக்கள் கூட்டத்துக்கு உவமைகள் வாயிலாக உரைத்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு எதையும் பேசவில்லை.”நான் உவமைகள் வாயிலாகப் பேசுவேன் உலகத் தோற்றமுதல் மறைந்திருப்பவற்றை விளக்குவேன்” என்று இறைவாக்கினர் உரைத்தது இவ்வாறு நிறைவேறியது.

**தியானம்:** “வார்த்தை வரும் போது நமது வாழ்வைக் குணப்படுத்தும், வார்த்தை எழும் பொழுது நமது வாழ்வை நிறைவாக்கும்’’ இன்றைய இறை தியானமானது இறைவார்த்தை எமது வாழ்க்கைக்கு அவசியமானது என்றும், கிறிஸ்தவர்களாகிய நாங்கள் கட்டாயம் அதை வாசித்து கடைப்பிடித்து வாழவேண்டுமென்பதையும் தெளிவுபடுத்தி நிற்கின்றது. ஒரு மரமானது செழித்து வளர்ந்து பலன்தர வேணடுமாயின் நாங்கள் விதையை மட்டும் விதைத்தால் மட்டும் போதாது அதற்குத் தேவையான உரம் போட வேண்டும், நீர் பாச்ச வேண்டும் அப்போதுதான் அம்மரமானது செழித்த வளர்ந்து பலவற்றிற்கு பயன்படும். அதேபோன்று தான் இன்றைய நற்செய்தியிலும் கடுகு விதை பற்றி கூறப்படுகின்றது. “கடுகு சிறிது காரம் பெரிது என்று நாங்கள் பேசிக்கொள்கின்றோம்’’ இங்கு கடுகு விதையானது இறைவார்த்தைக்கு ஒப்பிடப்படுகின்றது. இவ் இறைவார்தையானது எமது வாழ்க்கையில் பலன் கொடுக்க வேண்டுமாயின் நாங்கள் முதலில் நல்ல விதைகளுக்குள் வளரும் களைகளான பாவங்கள், பாவப் பழக்கவழக்கங்கள், தீய எண்ணங்கள் இவற்றிலிருந்து விடுபட்டு எங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும். அதன்பின் மற்றவர்களை தூய்மைப்படுத்தி விண்ணரசிற்கு செல்வதற்கு தயார்படுத்த வேண்டும். இது கிறிஸ்தவர்களாகிய எங்கள் ஒவ்வொருவரது கடமையாகும். எனவே தூய ஆவியானவரின் வல்லமை எம்மில் பொழியப்பட வேண்டும். அப்போது தான் நாங்களும் சீடர்களைப் போன்று உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்க முடியும். “தூர்ய ஆவி உங்களிடம் வரும்போது……..உலகின் கடையெல்லை வரை சாட்சிகளாயிருப்பர்கள்’’(தி.பணி 1:8). எனவே அன்று அன்னை மரியாள் எவ்வாறு ஆவியானவரால் நிரப்பப்பட்டாளோ, அப்போஸ்தலர்கள் எவ்வாறு ஆவியானவரினால் நிரப்பப்பட்டார்களோ அதே போன்று நாங்களும் நிரப்பப்பட தினமும் இறைவார்த்தையை வாசித்து ஆவியானவரின் வளிநடத்தலினூர்டாக முப்பதும், அறுபதும், தொண்ணூறுமாக பலன் கொடுத்து விண்ணரசிற்குள் சென்றடைய எங்களைத் தயார்படுத்துவோம்.